










We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 16.02.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்










## இந்திய நிகழ்வுகள்

- **ரஷ்ய** நாட்டின் **காப்புரிமை** பெற்ற **ஏ.கே.203** ரக **துப்பாக்கிகளை இந்தியாவிலேயே தயாரித்து** கொள்வதற்கான **ஒப்பந்தம்** இன்று கையெழுத்தாகவுள்ளது.
  - இந்த ஒப்பந்தத்தின் படி, 7.5 லட்சம் ஏ.கே.203 ரக துப்பாக்கிகள் அமேதியில் (உத்திரபிரதேசம்) உள்ள அரசு போர் தளவாட தொழிற்சாலையில் தயாரிக்கப்படவுள்ளது.

- **வருமான வரி கணக்கை தாக்கல் செய்வோர்** அத்துடன் தங்களது **ஆதார் எண் மற்றும் பான் கார்டு** விவரத்தை **தாக்கல் செய்ய வேண்டும்** என்றும், ஆதாருடன் பான் எண்ணை இணைப்பதற்கான **கடைசி தேதியாக மார்ச் 31** என்றும் **மத்திய வருமானவரித் துறை ஆணையம்** தெரிவித்துள்ளது.

- **ஏவுகணை** தாக்குதலைத் தடுக்கும் **போயிங் 777** (LAIRCM) விமானத்தை **190 மில்லியனுக்கு இந்திய அரசு வாங்க** உள்ளது.
  - இதை ஜனாதிபதி மற்றும் பிரதமர் நீண்ட தூர பயணத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
  - இது **'ஏர் இந்தியா ஒன்'** அல்லது **'இந்தியன் ஏர் ஃபோர்ஸ் ஒன்' என்று அழைக்கப்படும்.**
  - LAIRCM – என்பது மனிதத் தாக்குதல், மற்றும் ஏவுகணை தாக்குதலில் இருந்து விமானத்தைப் பாதுகாக்கும் ஓர் திட்டமாகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **செவ்வாய்** கிரகத்தில் **மனிதர்கள் வாழ்வதற்கான** சூழ்நிலைகள் குறித்து **ஆய்வு** செய்வதற்காக **நாசா 2003ம்** ஆண்டு அனுப்பிய **ஆபர்ச்சூனிட்டி ரோவர்** முழுமையாக **செயலிழந்து விட்டதாக நாசா** தெரிவித்துள்ளது.
  - கடந்த 7 மாதங்களுக்கு முன்பு செவ்வாய் கிரகத்தில் வீசிய புயலில் சிக்கிய அந்த விண்கலம் காணாமல் போனது. அந்த புயலில் வேகம் குறைந்து சராசரி நிலையை எட்டிய போது, ரோவர் விண்கலம் தென்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## விருதுகள்


We Shine Academy

- பிப்ரவரி 22ம் தேதி **பிரதமர் மோடிக்கு சியோல் அமைதி விருதை தென்கொரியா** வழங்குகிறது.

## நியமனங்கள்

- இந்தியாவின் **முதல் பெண் விமானப் பொறியாளராக ஹினா ஜெய்ஸ்வால்** (சண்டிகர்) நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர், விமானப் பொறியாளராக இந்திய விமானப் படையின் **ஹெலிகாப்டர் செயல்பாட்டு பிரிவுகளில்** பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- **நேரடி வரிகளுக்கான மத்திய வாரியத்தின் தலைவராக புரமோத் சந்திர மோடி** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - நேரடி வரிகளுக்கான மத்திய வாரியத்தின் தலைவராக இருந்த **சுஷில் சந்த்ரா தேர்தல் ஆணையராக பொறுப்பேற்றதை** அடுத்து புரமோத் சந்திர மோடி நியமிக்கப்பட்டுள்ளார்.

- **இந்திய அமெச்சூர் கபடி சம்மேளனத்தின் தலைவராக கசானி ஞானேஸ்வரர் முடிராஜும்** துணைத் தலைவர்களாக தினேஷ் பட்டீல், ஜெகதீஷ்வர் யாதவ் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
    - இணைச் செயலாளர்களில் ஒருவராக தமிழகத்தைச் சேர்ந்த ஏ.சபியுல்லா மீண்டும் தேர்வாகியுள்ளார். இவர் தமிழ்நாடு அமெச்சூர் கபடி சங்க பொதுச் செயலாளராகவும் உள்ளார்.